**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை: **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 8 ஆம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண்.1/2025 ல்**

**மேல்முறையீட்டு வழக்கு எண்.176/2025**

1) காமாட்சி (எ) கவிதா,
க/பெ. S.பன்னீர்செல்வம்,
ஹரிபிரகாஷ் ஏஜென்சிஸ்,
பெரியார் சிலை அருகில்,
பள்ளத்துார், பட்டுக்கோட்டை.

2) தீபிகா,
த/பெ. S.பன்னீர்செல்வம்,
78, அரியபத்திர பிள்ளை தெரு,
நாகப்பட்டினம் அஞ்சல்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

3) வினோதினி,
த/பெ. S.பன்னீர்செல்வம்,
31, அரியபத்திர பிள்ளை தெரு,
நாகப்பட்டினம் அஞ்சல்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

4) ரேவதி,
த/பெ. S.பன்னீர்செல்வம்,
50, முதன்மைச் சாலை,
நெம்மேலி,
தஞ்சாவூர். ... மனுதாரர்கள்/1 முதல் 4 மேல்முறையீட்டாளர்கள்

/எதிர் /

R.முத்துராமலிங்கம்,
த/பெ.ராமசாமி,
எண்.6, காந்தி தெரு,
விவேகனந்தா நகர்,

மேலகல்கண்டார்கோட்டை,
திருச்சி. ... எதிர்மனுதாரர்/எதிர்மேல்முறையீட்டாளர்

இம்மனு, கடந்த 04.06.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.மணிவண்ணபாரதி அவர்களும், எதிர்மனுதாரர்/எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ஜெயசங்கர் அவர்களும் முன்னிலையாகியும், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதவுரைகளைக் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

**உத்தரவு**

1. மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் அசல் வழக்கு எண். 836/2015 ல் திருச்சிராப்பள்ளி, 1 வது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் 28.01.2023 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் பேரில், அந்த வழக்கின் மேல்நடவடிக்கைகளை, இந்த மேல்முறையீடு முடியும் வரையிலான காலத்திற்கு நிறுத்தி வைத்து தடையுத்தரவு வழங்கக் கோரி, உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 41 விதி 5(2) உ/இ பிரிவு 151–ன் கீழ், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 1ம் மனுதாரர்/1ம் மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், 1ம் மனுதாரர் மேல்முறையீட்டு வழக்கில் 1ம் மேல்முறையீட்டாளர்

என்றும், 2 முதல் 4 வரையிலான மேல்முறையீட்டாளர்கள் அவரது மகள்கள் மற்றும் இறந்துபோன 1வது பிரதிவாதியின் சட்டபூர்வ வாரிசுகள் என்றும், திருச்சிராப்பள்ளி, 1வது கூடுதல் சார்பு நீதிமன்ற அ.வ.எண்.836/2015 ல், 28.01.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கெதிராக இந்த மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை அடிப்படையிலான அனைத்து மேல்நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்க வேண்டுமென்றும், அதை இந்த மேல்முறையீடு நிலுவையில் உள்ளபோது அனுமதித்து விட்டால் மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பும் துன்பமும் ஏற்படும் என்றும், எனவே, மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

3. எதிர்மனுதாரர்/எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரரின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், இந்த மேல்முறையீடு தாக்கல் செய்திருப்பது மட்டுமே, நிறைவேற்று நடவடிக்கைகளுடன் சேர்த்து விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பாணையை நிறுத்தி வைப்பதற்கு போதுமானதாக இருக்காது என்றும், 1ம் பிரதிவாதி 10.03.2022 அன்று இறந்துவிட்டதாக 1ம் பிரதிவாதியின் மறைவு குறித்து மேல்முறையீட்டாளர் விசாரணை நீதிமன்றத்தில், எந்தவொரு அறிவிப்பும் செய்யவில்லை என்றும், வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த இடைக்காலத் தடை மனு

அனுமதிக்கப்பட்டால், இந்த எதிர்மனுதாரருக்கு, மனுதாரர்கள்/ தீர்ப்புக்கடனாளிகளிடமிருந்து (JDRs) தீர்ப்புத்தொகையை வசூலிக்க வேறு எந்த வழியும் இல்லாமல் போய்விடும் என்றும், எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

4. இந்த மனுவில் பரிசீலிக்கப்பட வேண்டியது என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இருதரப்பு கருத்துக்களும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

6. எதிர்மனுதாரர்/எதிர்மேல்முறையீட்டாளர் விசாரணை நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.836/2015 என்ற வழக்கை தொகையை வசூலிக்கக் கோரி தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்களுக்கெதிராக, எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட திருச்சிராப்பள்ளி, 1வது கூடுதல் சார்பு நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.836/2015 ல் 28.01.2023 அன்று தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தீர்ப்பிணை எதிர்த்து மனுதாரர்கள் / மேல்முறையீட்டாளர்களால் இந்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீடு நிலுவையிலுள்ள நிலையில், எதிர்மனுதாரர் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பின் பேரில் நிறைவேற்று மனு தாக்கல் செய்யகூடும் என்றும், எனவே, அசல் வழக்கின் அனைத்து மேல்முறையீட்டு நடவடிக்கைகளையும், இந்த

மேல்முறையீடு முடியும் வரை நிறுத்தி வைக்கக் கோரி இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா? என்பதை, மேல்முறையீடு விசாரணையின்போது தான் தீர்மானிக்க முடியும். எனினும், மேல்முறையீடு நிலுவையில் இருக்கும்போது, தடை உத்தரவு வழங்கப்படாவிட்டால், மேற்படி நிறைவேற்று மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே, இந்த மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலை கருதியும், நீதியின் நலன் கருதியும், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இந்த மனு பகுதியாக அனுமதிக்கத்தக்கதென முடிவு செய்யப்படுகிறது.

**8. முடிவாக,**

1) இந்த மனு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

2) திருச்சிராப்பள்ளி, 1வது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில், அசல் வழக்கு எண்.836/2015 ல், 28.01.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையிலான மேல்நடவடிக்கைகள், ஒரு மாதத்திற்கு நிறுத்தி வைக்க இடைக்கால தடை உத்தரவு வழங்கப்படுகிறது.

3) இந்த உத்தரவு தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள், மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள், அசல் வழக்கில் குறிப்பிடப்பட்ட அசல்

தொகை ரூ.2,00,000/–ல் 10% தொகையான **ரூ.20,000/–ஐ (இருபதாயிரம்** மட்டும்) விசாரணை நீதிமன்றத்தில், தனது கட்சிக்கு பாதகமன்னியில், வைப்பீடு செய்யும்பட்சத்தில், மேற்படி தடை உத்தரவு இந்த மேல்முறையீடு விசாரணை முடியும் வரை நீட்டிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில், இம்மனு ஒரு மாதத்திற்குப் பிறகு தானாகவே தள்ளுபடியாகி விடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

4) மனு செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 8 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.06.08 16:53:52 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**